## தேசிய இளைஞர்கள் சேவை மன்றம் - 2017

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர்கள் சேவை சட்டத்தின் 29(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் மன்றத்தின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) உப பிரிவினால் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்காக தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, இலங்கை இளைஞர்கள் சேவை மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 ஒன்றித்த நிதிக் கூற்றுக்கள்

தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தின் 98 சதவீதமான பங்குகளின் உரிமையுடன் 1981 இல் ஆரம்பிக்கபட்ட வ/ய இளைஞர் சேவை (தனியார்) கம்பனி நிறுவப்பட்டு செயலாற்றல் அலுவல்கள் நடைபெற்றுக் கொண்டிருந்த போதிலும், சபையின் நிதி கூற்றுகளுடன் அந்த கம்பனியின் நிதிக் கூற்றுக்கள் ஒன்றித்து தயாரித்திருக்கவில்லை.

#### 2.2.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07

(i) நியமத்தின் 65 ஆம் பந்தியின் பிரகாரம், நடைமுறை அல்லாத சொத்துகளுக்கு ஆக்கபூர்வமான வாழ்க்கை காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமையால் நடைமுறை ஆண்டு இறுதியில் உள்ளவாறு முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த 477 கட்டிடங்கள் 84 மோட்டார் வாகனங்கள் 5,608 அலகுகள் தளபாடங்கள் உபகரணங்கள் தொடர்ந்து பயன்படுத்தபட்டு காணப்பட்டது. அதன் பிரகாரம், ஏற்பட்டுள்ள மதிப்பீட்டு வழுவினை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 03 இன் பிரகாரம் திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் அதனது மொத்த தாங்கக் கூடிய பெறுமதி நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தி இருக்கவில்லை.

(ii) நியமத்தின் 25 ஆம் பந்தியின் பிரகாரம் ஏதேனும் சொத்தொன்று பரிமாறப்படாத கொடுக்கல் வாங்கல் ஊடாக தனதாக்கியிருந்த போது தனதாக்கிய நாளில் உள்ளவாறு நியாயமான பெறுமதிக்கு கணக்கீடு செய்ய வேண்டுமெனினும் 12 பயிற்சி நிலையங்கள் நடத்தப்பட்டு வரும் காணிகளின் பாதுகாப்பு வேலிகள் மற்றும் அரைச் சுவர் நிர்மாணித்தல் போன்ற அலுவல்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மாத்திரம் நிதி நிலைமை கூற்றில் காணி மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு கொள்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதி நிலைமை கூற்றில் உரிமை மூலதனங்களின் கீழ் காட்டப்பட்டிருந்த இலங்கை அரசிடம் மற்றும் வெளிநாடுகளில் இருந்து கிடைத்திருந்த மானியங்கள் முறையான அடிப்படை ஒன்றின் கீழ் வருமானம் என இனங்காண்பதற்காக கணக்கீட்டு கொள்கை ஒன்று இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சொத்தொன்றின் பெறுமானத் தேய்வு கழித்தல் ஆரம்பிக்கப்படுவது அதனை பயன்படுத்தவதற்காக தயாராக நிலைக்கு வந்த பின்னராக, அதற்கு முரணான நிலையான சொத்துக்கள் கொல்வனவு செய்த ஆண்டிற்கு அடுத்த ஆண்டு முதல் பெறுமானத் தேய்வு கழித்தல் ஆரம்பிக்கும் முகமாக கொள்கை ஒன்று இனங்கண்டிருந்து.

(இ) கிரயம் அல்லது நிகர தேறிய பெறுமதி ஆகிய பெறுமதிகளில் குறைந்த பெறுமதியில் இருப்புகளின் பெறுமதியை கணிக்க வேண்டுமெனினும் அதற்கு முரணாக இருப்பு கிரயத்திற்கு கணக்கப்படும் விதத்தில் இருப்பு கொள்கை இனங்கண்டிருந்தது.

### 2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சட்டரீதியான உரிமை சபைக்கு காணப்பட்ட 05 காணிகளின் பெறுமதியின் பெறுமதி மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுகளில் காட்டியிருக்கவில்லை.

(ஆ) 2000 ஆண்டின் போது நகர அபிவிருத்தி அதிகார சபையினால் 50 வருட நீண்ட கால குத்தகைக்கு பெற்றிருந்த காணி 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 2,131,200 தொகை பெறுமதியான குத்தகை காணியின் கீழ் சாட்டுவதற்கு பதிலாக நிதி நிலைமை கூற்றில் காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் உட்படுத்தப்பட்டிருந்தது.

(இ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் செயற்படுத்தப்படும் 20 விவசாயப் பண்ணைகளின் வருடாந்த இலாபமாக ரூபா 7.931,519 தொகை காட்டப்பட்டிருந்த போதிலும் விவசாய பண்ணைகளின் சொத்துக்களின் பெறுமானத் தேய்வு, விவசாய பயிர்களின் இறுதி இருப்பு மற்றும் பண்ணை உற்பத்திகளின் கடன் விற்பனைகள் தொடர்பாக சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஈ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 2017 திசெம்பர் 31 இல் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 753,903,484 தொகைக்கான நடைபெறுவேலைகளின் பெறுமதி, பொருத்தமற்ற வீதத்தில் நிதி நிலைமை கூற்றில் ஏனைய நிதி சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.5 விளக்கமளிக்கபடாத வித்தியாசங்கள்

கம்பனியின் நிதிக் கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு வரையறுக்கப்பட்ட இலங்கை இளைஞர் சேவை கம்பனிக்கு செலுத்த வேண்டிய கடன் கொடுத்தோர் மீதி ரூபா 3,602,190 தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும் அந்த கம்பனியினால் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அத்திகதியல் உள்ளவாறு மன்றத்திடம் அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 73,427,936 தொகையாக காணப்பட்டமையால் அந்த இரண்டு மீதிகளிடையே ரூபா 69,825,746 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

### 2.2.6 பெறவேண்டிய கணக்குகள்

விளையாட்டுத் துறை அபிவிருத்தி திணைக்களத்திலிருந்து பெற வேண்டிய 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 07 வருடங்களை விடபழமை வாய்ந்த ரூபா 538,950 தொகையான மீதி மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது.

## 3 நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 292,520,000 இற்கான பற்றாக்குறை ஒன்று காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 269,787,000 தொகை ஆக காணப்பட்டதுடன் முன்னைய ஆண்டுடன் இணக்கஞ் செய்த போது மீளய்வாண்டின் நிதிவிளைவுகளின் ரூபா 22,733,000 இற்கான வீழ்ச்சி ஒன்றினை காட்டியது. ஆண்டிற்கான மொத்த வருமானம் ரூபா 490,649,000 இனால் அதிகரித்திருந்த போதிலும் செயற்பாட்டு செலவுகள் ரூபா 51,557,000 தொகையினாலும் இளைஞர் அபிவிருத்தி செலவுகள் ரூபா 461,825,000 தொகையினாலும் அதிகரித்திருந்த மேற்கூறிய வீழ்ச்சில் முக்கியமாக பாதித்துள்ளது.

மீளாய்வாண்டு மற்றும் கடந்த 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்த போது 2013 ஆண்டில் ரூபா 253,277,000 தொகையாக காணப்பட்ட பற்றாக்குறை தளம்பள்களுடன் வளர்ச்சி அடைந்து 2017 ஆண்டில் ரூபா 292,520,000 தொகை ஆகி இருந்தது. எவ்வாறாயினும், நிதி விளைவுகளுக்கு ஊழிய வேதனம் மற்றும் நடைமுறை அல்லாத சொத்துகளுக்காக பெறுமானத் தேய்வு சீராக்கல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் ரூபா 1,124,581,000 தொகைக்கான பங்களிப்பு இடையறாமல் வளர்ச்சி அடைந்து 2017 ஆண்டின் போது ரூபா 1,993,313,000 தொகை ஆக இருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை மற்றும் மீளாய்வு

1979 இன் 69 ஆம் இலக்க தேசிய இளைஞர் சேவைச் சட்டத்தின் 4 ஆம் பிரிவின் குறிப்பிட்டுள்ள குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்காக மீளாய்வாண்டின் போது செயற்படுத்துவதற்கு திட்டமிட்டிருந்த நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்திலுள்ள 03 நிகழ்ச்சி திட்டங்கள் செயற்படுத்தி இருக்காததுடன், அதில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதற்கு விருப்பமுடைய இளம் வியாபாரிகள், தற்போது வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடடுள்ள மற்றும் தொழில் பயிர்ச்சி நிறுவனங்களில் மாணவர்களுக்காக வர்த்தக முயற்சி ஒன்று மிகவும் ஆக்கபூர்வமாக நடாத்துவதற்காக உதவுதல் மற்றும் தேவையான பயிற்சிகளை வழங்குவதற்கான 02 வர்த்தக தொழில்நுட்ப பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு ரூபா 500,000 ஒதுக்கப்பட்டிருந்தது. அதற்காக ரூபா 1,454,417 தொகை செலவிடப்பட்டு செய்தித்தாள் அறிவித்தல் வெளியிட்டிருந்த போதிலும் கிடைத்திருந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை போதியளவினதாக காணப்படாமையினைக் காரணமாகக் காட்டி இந்த நிகழ்ச்சி திட்டத்தை அமுல் நடாத்தியிருக்கவில்லை.

(ii) வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ள அனேக நிகழ்ச்சி திட்டங்கள் எதிர்பார்த்த இலக்குகளை நெருங்கியிருந்த போதிலும், பாடசாலை பிள்ளைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டங்கள் மற்றும் பாடசாலையை விட்டு விளகிய பிள்ளைகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சி திட்டம் எதிர்பார்த்தவாறு செயற்படுத்தி இருக்காததுடன் அவற்றின், முன்னேற்றம் முறையே 38 சதவீதம் மற்றும் 48 சவீதமாகும்.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆண்டின் போது தேசிய இளைஞர் சேவை மன்ற உள்ளக கணக்காய்வு அலகின் மூலம் வெளியிடப்பட்ட 11 பரிசோதனை அறிக்கைகளின் மூலம் கண்டறியப்பட்ட 21 விதப்புறைகள் தொடர்பாக 2018 ஆகஸ்ட் 14 ஆம் திகதி வரை அவற்றை சரி செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மன்றத்தினால் வெளி நிறுவனங்களுக்கு சொந்தமான 03 வாகனங்கள் 03 வருடங்களை விட மிகையான காலம் முதல் முறையாக உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்காமல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

**4.3 செயற்பாடு தொழிற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) காணிப்பகுதியில் கணக்காய்விற்கு சமர்பித்திருந்த தகவல்களின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 அளவில் மன்றத்தினால் அனுபவித்துவரும் 59 காணிகளின் சட்டரீதியான உரிமையை மன்றத்திற்கு உரித்தாக்குவதற்காக மன்றத்திற்கு இயலாதுள்ளது. இது தவிர புகையிரத்தால் திணைக்களத்திற்கு சொந்தமான பொல்கஹவெல பயிற்சி நிலையம் நடாத்தப்படும் காணி மற்றும் பொரளையில் அமைந்துள்ள காணி என்பன முறையே 32 ஆண்டுகள் மற்றும் 30 ஆண்டுகளுக்கு மிகையான காலம் முதல் மன்றத்தினால் அனுபவிக்கப்பட்டு வந்த போதிலும், அவற்றின் சட்டரீதியான உரிமையை தீர்த்து கொள்வதற்கு முடியாதுள்ளது.

**(ஆ) துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டம்**

(i) துறைசார் திறன்கள் அபிவிருத்தி நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் கல்வி பதவியனிக்கு செலுத்தபடுகின்ற செயலாற்றுகை படி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் போது திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சினால் சமர்பித்திருந்த தரவு திறன்கள் சரியான முறையில் புரிந்து கொள்ளாமல் மற்றும் செயலாற்றுகை தொடர்பாக முறையான மதிப்பாய்வு செய்யாமல் அந்த படி செலுத்தியிருந்ததாக அவதானிக்கப்பட்டது. 2017 ஆண்டின் போது தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் செயலாற்றுகை படியாக ரூபா 4,002 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(ii) திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சு செயலாளரின் MSDVT/SSDP/2016-1 ஆம் இலக்க மற்றும் 2016 பெப்ரவரி 26 திகதி பயிற்சி நிலையங்களில் தர முகாமைத்துவ முறைமை நிறுவுதல் மற்றும் தர கலாச்சாரத்தை (culture)அபிவிருத்தி செய்தல் தொடர்பான சுற்றறிக்கையின் மூலம் தேசிய இளைஞர் சேவைமன்றம் தொடர்பான 2016 ஆண்டிற்கான 10 பயிற்ச்சி நிறுவனங்கள் மற்றும் 2017 ஆண்டிற்கான வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 20 பயிற்சி நிறவனங்களில் தர முகாமைத்துவ முறைமை நிறுவப்பட்டு உரிய சான்றிதழ்கள் பெற்றுக் கொள்வதற்கு இலக்காகி இருந்த போதிலும் 2018 ஏப்ரல் 30 திகதி அளவில் மன்றத்திற்கு செந்தமான 52 பயிற்சி நிலையங்களில் 07 பயிற்சி நிறுவனங்கள் மாத்திரம் தர முகாமைத்துவ சான்றிதழ் பெறப்பட்டிருந்தது.

(iii) மேற்கூறிய நிகழ்ச்சி திட்டத்தில் 2014 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை அங்கீகரிக்கப்பட்டிருந்த விரிவான செயல் நடவடிக்கைத் திட்டத்தில் மன்றத்திற்கு உரிய செயற்பாடுகள் 1.4.6 இன் கீழ் நிதி தேவையுடைய மாணவர்களை இனங்கண்டு 100 மாணவர்களுக்கு மாதாந்தம் 4,000 வித கொடுப்பனவு ஒன்று வழங்குவதற்காக மதாந்தம் ரூபா 4,800,000 தொகை வீதம் மொத்த காலப் பகுதிக்காக ரூபா 33,600,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், 2014 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரையான மன்றத்தின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டங்களில் இந்த செயற்பாடுகள் உட்படுத்தியிருக்கவில்லை.

(இ) இலங்கையில் இளைஞர் யுவதிகளின் தேவைகளுக்கு சிறந்த முறையில் பதில் அளிக்கும் முகமாக தேவையான நிலைபேறான அபிவிருத்தி கொள்கைகளை ஆக்குவதற்கு அரசாங்க இயலுமை கொள்திறனை வலுப்படுத்தும் குறிக்கோளுடன் (ESCAP) ஐக்கிய நாடுகளின் ஆசிய பஸிபிக் வலய பொருளாதார சமூக ஆணைக்குழுவின் ரூபா 2,961,000 இற்கு நிதி உதவியுடன் செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் இளைஞர் அமைப்புகள் அபிவிருத்தி பிரிவு இந்த நிகழ்ச்சி திட்டத்துடன் தொடர்புபட்டிருந்ததுடன் இந்த கொள்கைசார் தந்தோரபாயங்களை தயாரிப்பதற்காக தேவையான அனைத்து தகவல்களுக்காக நுழைவதற்காக இயலுமை காணப்பட்டதுடன் ESCAP உடன் நடத்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சி திட்டங்கள், விரிவுரைகள் மற்றும் கலந்துரையாடல்களுக்காக இளைஞர் அமைப்புகள் அபிவிருத்தி பிரிவுக்கு பொறுப்பான உதவி பணிப்பாளர் மற்றும் இரண்டு உத்தியோகத்தர்கள் பங்குபற்றியிருந்தனர். நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்தும் இயலுமை சபையிடம் காணப்பட்ட போதிலும் சபையினால் இந்த நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்துவதற்காக பங்காளி ஒருவராக அரச சார்பற்ற அமைப்பு ஒன்றினை தெரிவு செய்திருந்தது.

(ii) அந்த நிறுவனத்தின் பதிவுகள் மற்றும் நீடித்திருத்தல் என்பவற்றை உறுதிப்படுத்தாமல் மற்றும் பிணைபாதுகாப்பு முறி ஒன்றும் பெற்றுக் கொள்ளாமல் 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.4 பந்திக்கு முரணாக பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் முற்பணமாக 2017 அக்தோபர் 17 திகதி ரூபா 1,005,000 தொகை அரச சார்பற்ற நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது.

(ஈ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் 48 பயறிச்சி நிலையங்களில் செயற்படும் முழுநேர பாடநெறிகளுக்காக மாணவர்கள் பதிவு செய்தல் 2016 ஆண்டின் போது 8,557 தொகை அதாவது முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 14.66 சதவீத வளர்ச்சி ஒன்றினை காட்டியது. எனினும் 2017 ஆண்டின் போது மாணவர்கள் 9,169 தொகை காணப்பட்டமையினால் அங்கு 7.15 சதவீத வளர்ச்சி ஒன்றும் அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் வருடாந்த மாணவர் பதிவுகள் அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது ஆள்சேர்ப்பு அபிவிருத்தி வேகம் 7.51 இற்கான குறைவடைதல் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(உ) பதிவு செய்த மாணவர்களின் பாடநெறிகளை விட்டு செல்லும் சதவீத 2014 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரையான காலப் பகுதியில் 20 சதவீதத்திற்கும் 21 சதவீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன், 2017 ஆண்டின் போது அது 27.89 சதவீதம் வரை மேலும் அதிகரித்திருந்தது.

**4.4 நிதியங்கள் குறை பயன்பாடு**

2015 ஆண்டின் போது Active Citizen Training Programme இன் கீழ் ஐக்கிய நாடுகளின் அமைப்பின் இருந்து தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு ரூபா 2,215,328 தொகை கிடைத்திருந்ததுடன், 2018 ஜுன் 30 ஆம் திகதி வரையும் குறிப்பிட்ட கருமத்திற்காக அதனைப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.6 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்பிக்கபட்டிருந்த கலஞ்சிய இருப்பு கணிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் இரண்டு வருட காலம் முதல் காணப்பட்ட கூட்டுத்தெகை ரூபா 405,850 தொகைக்கான 09 தொகுதிகளை சேர்ந்த 368 அலகு விளையாட்டு உபகரணங்களும் ஒருவருட காலத்தை விட மிகையான காலம் காணப்படும் ரூபா 837,952 தொகையான 09 தொகுதிகளை சேர்ந்த 2,207 அலகு ஏனைய பண்டங்களும் கிளையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் 2003 ஜுன் 23 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் ரூபா 2,960,000 தொகை செலுத்தப்பட்டு அதற்கு மேலதிகமாக வருடாந்த தொகை என வாடகை ரூபா 1000 வீதம் செலுத்தும் நிபந்தனையின் மீது இளைஞர் நிலையம் நிர்மாணிப்பதற்காக குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த பேருவளை பிரதேசத்தில் அமைந்துள்ள 01 ஏக்கர் காணி 2018 மார்ச் 15 ஆந் திகதி வரை நிர்மாண வேலைகள் ஏதும் மேற்கொள்ளபடாமல் பயன்பாடற்றுக் காணப்பட்டது.

(இ) மூன்று வருட காலத்திற்குள் 3000 சதுர அடிகளை கொண்ட கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தொழிற் பயிற்சி நிலையம் ஒன்று நடாத்தும் நோக்குடன் தனியார் தரப்பினருக்கு சொந்தமாக இருந்த சியனே கோரளை அதிகாரி பத்துவ கோனஹேன பகுதியில் அமைந்திருந்த 20 பர்சஸ் காணி 1996 அக்தோபர் 09 ஆம் திகதி நன்கொடை காணி உறுதி ஒன்றின் மூலம் மன்றத்திற்கு உரித்தாக்கப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 அளவிலும் குறிப்பிட்ட இடத்தில் தொழில் பயிற்சி நிலையம் ஒன்று ஆரம்பிப்பதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை அதன் பிரகாரம் 21 ஆண்டுகளாக இந்த காணி பயனற்ற செத்தொன்றாக காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

**4.6 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த மன்றத்தின் வளங்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிறுவனத்திற்கு சொந்தமான ரூபா 24,100,000 கிரயத்திற்கான 02 வாகனங்கள் 2012 ஆண்டில் இருந்து ஒரு வாகனம் 2013 ஆண்டில் இருந்து வரிசை அமைச்சின் பாவனைக்காக வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சிரேட்ட முகாமைத்துவ மட்டத்தை சேர்ந்த 03 உத்தியோகத்தர்கள் மற்றும் உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஒருவர் 2017 ஆண்டின் போது தேசிய இளைஞர் சேவை மன்றத்துடன் தொடர்பில்லாத 03 வெளி நிறுவனங்களின் கடமை அலுவல்களுக்காக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

## 4.7 பதவியணி நிருவாகம்

---------------------------------------------

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 1431 தொகையாக இருந்ததுடன் உள்ளவாறான பதவியணி 1245 ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 186 பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன என அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உயர் முகாமைத்துவ மட்டத்தை சேர்ந்த 03 பதவிகளுக்காக மூன்று உத்தியோகத்தர்கள் 18 மாதங்கள் முதல் மற்றும் 03 வருட கால பகுதி விடுவிப்பு அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்ததுடன் பிரதிப் பணிப்பாளர் பதவிக்காக 10 உத்தியேகத்தர்கள் பதில் கடமையாற்றுவதற்காக நியமனம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2016 நவம்பர் 08 திகதி உள்ளவாறு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவிகளின் எண்ணிக்கையை விட மேலதிகமாக 15 பிரதிப்பணிப்பாளர் பதவிகளும் 12 உதவிப் பணிப்பாளர் பதவிகளும் 04 மத்திய மட்டத்தை சேர்ந்த உத்தியோகத்தர்களும் பதவி கடமை மற்றும் கடமை மேவகை செய்யும் அடிப்படையில் இணைக்கப்பட்டிருந்தனர். இது தொடர்பாக முகாமைத்தவ சேவை பணிப்பாளரின் DMS/1671-V-II மற்றும் 2016 நவம்பர் 08 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் ஏதேனும் ஒரு பதவி ஒன்றில் பதில் கடமை ஆற்றுதல், மேவகை செய்தல் அல்லது நிரந்தரமாக நியமனம் வழங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்ட பதவிகளின் எண்ணிக்கையினுள் மாத்திரம் எனவும் இந்த நிலைமையை சரி செய்ய வேண்டுமெனவும் அறிவித்திருந்ததுடன், 2017 திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறான சரி செய்தல் மேற்கொண்டிருக்கவில்லை.

(ஈ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத ஊடாக அலோசகர் பதவியில் கடைமையை நிறைவேற்றும் அடிப்படை எரிபொருளுடன் வாகனம் ஒன்றும் மாதாந்த ரூபா 40,000 இற்கான படி ஒன்றுடன் ஊடாக ஆலோசகர் ஒருவர் 2015 ஏப்ரல் 30 திகதி முதல் நியமனம் செய்யப்பட்டிருந்ததுடன், 2017 திசெம்பர் 31 திகதி அளவில் மாதாந்த படியாக கூட்டுத்தொகை ரூபா 1,281,333 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

(உ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் தொழில் நுட்ப மற்றும் தொழில் பயிற்சி பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 176 ஆகக் காணப்பட்டதுடன், பணிப்பாளர் (பயிற்சி) மற்றும் பிரதிப் பணிப்பளர் (தொழில்நுட்ப மற்றும் தொழில் பயிற்சி) ஆகிய பதவிகளும் உட்பட 2018 மார்ச் 31 திகதியில் உள்ளவாறு 61 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவற்றில் 59 வெற்றிடங்கள் கல்வி பதவியணியை சேர்ந்தாக இருந்தது அவதானிக்கப்பட்டது.

(ஊ) தேசிய இளைஞர் சேவை மன்றத்தின் உதவி இளைஞர் சேவை உத்தியோகத்தர் ஒருவராக கடமையாற்றி திருப்திகரமற்ற கடமை நிலைமையின் மீது தாபனக் கோவையின் V அத்தியாயத்தின் 7 ஆம் பந்தியின் பிரகாரம் சேவையை விட்டுச் சென்றுள்ள நபர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டிக் காணப்பட ரூபா 59,875 இற்கான தொகையினை அறவீடு செய்யாமல் மொத்த பணிக்கொடை தொகையும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் அந்த உத்தியோகத்தரினால் கடமையாற்றிய காலத்தில் உதவிப்பணிப்பாளர் ஒருவரின் பதவி முத்திரையை வைத்து அங்கீகாரமின்றி போலி கையொப்பமொன்றுடன் அரச வங்கி ஒன்றில் இருந்து ரூபா 50,000 தொகைக்கான கடன் தொகையொன்று பெற்றுக் கொள்ளல் தொடர்பாக தாபனக் கோவையின் தொகுதி II அத்தியாயம் XLVIII பிரிவு 29,31 இன் பிரகாரம் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

**4.8 வாகனப் பாவனை**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 ஜுலை 10 திகதி இலக்கம் 2015/02 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் அறிவுரைகளை கடைபிடித்து 2018 ஜுன் 30 திகதிக்கு முன்னர் அகற்றி 2018 ஜுலை 30 திகதி அல்லது அதற்கு முன்னர் கொன்ட்டோலர் ஜனரால் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட வேண்டுமெனினும் 2017 திசெம்பர் 31 அளவில் அகற்றபட வேண்டிய நிலையில் காணப்பட்ட 07 வாகனங்கள் தொடர்பாக அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதி அளவில் சபைக்கு சொந்தமான/ பயன்படுத்தப்படும் 06 வாகனங்கள் பல வருட காலமாக திருத்த வேண்டிய நிலையில் காணப்பட்டதுடன் குறிப்பிட்ட திருத்த அலுவல்கள் மேற்கொள்ளபடாமல் சபையின் திறந்த வெளியில் நிறுத்தப்பட்டு காணப்பட்டது.

**5. நிலைபேறான அபிவிருத்தி**

**5.1 நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்**

நிலைபேறான அபிவிருத்தி மீதான ஐக்கிய நாடுகளின் ''2030 ஆண்டு நிகழ்ச்சி நிரல்'' இன் பிரகாரம் அனைத்து அரச துறைகளினாலும் செயற்பட வேண்டிக் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டிற்கான தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் தனது நோக் கெல்யின் கீழ் காணப்படும் கருமங்கள் தொடர்பாக எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பாக அறிந்திருக்கவில்லை.

**6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த வேலை நடவடிக்கை முறை**

**6.1.1 பெறுகை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கம்பஹா மாவட்ட அலுவலகத்தின் வர்ணம் தீட்டுவதற்காக உடன்பட்ட பெறுமதி ரூபா 956,845 தொகை ஆகும்.

(i) மேற்கூறிய நிர்மாண வேலைக்காக சந்தை விலை நிர்ணய முறை கடைபிடிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்த போதிலும் கூறுவிலை அழைக்கப்படும் போது பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடம் கூறுவிலை அழைக்கப்படல் அல்லது ஏனைய ஏற்றுக் கொள்ளக் கூடிய நடைமுறை ஒன்று கடைபிடிக்கப்பட்டிருக்காததுடன், ஒப்பந்தகாரர் தெரிவு செய்தல் தொடர்பாக கணக்காய்வின் போது சிக்கல் தன்மை காணப்பட்டது.

(ii) பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டல் 5.4.4 இற்கு முரணாக ஏற்றுக் கொள்ளக் கூடிய முற்பணம் செலுத்தும் பாதுகாப்பு பிணைமுறி ஒன்று பெற்றுக் கொள்ளாமல் ரூபா 191,369 தொகை முற்பணமாகச் செலுத்தியிருந்தது.

**(ஆ) தலைமை அலுவலகத்தில் வர்ணம் பூசுதல் கட்டம் II- உடன்படிக்கை பெறுமதி ரூபா 8,692,720**

சந்தை விலை நிர்ணய முறை கடைபிடிக்கப்பட்டதாக குறிப்பிட்டிருந்த போதிலும் அந்த முறை கடைபிடித்திருக்கவில்லை என போலி விலை கூறல்கள் பயன்படுத்தியிருந்ததுடன் 2017 அக்தோபர் 24 ஆந் திகதி கணக்காய்வின் போது மேற்கொள்ளபட்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதேபோல, இந்த ஒப்பந்த வேலைக்காக தயாரிக்கப்பட்டிருந்த பொறியியல் மதிப்பீட்டின் குறிப்பிட்டுள்ள 08 விடயங்களில் றேட்கள் மற்றும் ஒப்பந்தகாரரினால் சமர்பித்திருந்த ரேட்கள் இடையே 20 சதவிதம் முதல் 167 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டன. இது தொடர்பாக தொழில் நுட்ப மதிப்பாய்வு குழுவின் மற்றும் பெறுகை குழுவின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் கணக்காய்வின் இது தொடர்பாக விசாரணை நடைபெற்று கொண்டிருக்கும் போது ஒப்பந்தகாரர் நிர்மாண வேலையை இடைநிறுத்தியதுடன், மன்றத்தினால் இந்த ஒப்பந்த காரரிடம் செயலாற்றுகை பிணைமுறி ஒன்றும் பெற்றிருக்கவில்லை.

மேலும், 2017 திசெம்பர் 28 திகதி தேசிய கொள்கைக்காக மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் வர்ணம் பூசுவதற்கான சிட்டைகளை வேறு நிறுவனமொன்றினை தொழில்நுட்ப அலுவலரின் விதப்புரையின் மீது கொடுப்பனவு மேற்கொள்ளுமாறு விதந்துரைக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பெறுகை நடவடிக்கை முறையில் போலி ஆவணங்கள் தயாரித்து பிழையாக செயல் முறைகள் நிறைவேற்றுதல் தொடர்பாக நடவடிக்கை ஏதும் எடுத்திருக்கவில்லை.

### 6.1.2 ஒப்பந்த வேலை நிருவாகத்தின் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 மே 21 திகதி 13/0502/639/014 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் மாத்தறை நில்வலா இளைஞர் பூங்கா நிர்மாணிப்பதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இது தொடர்பாக முன் சாத்தியக் கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சினால் குறிப்பிட்ட காணி உரிமையாளர்களுக்கு நட்டஈடு மற்றும் வட்டியாக கூட்டுத்தொகை ரூபா 142,810,543 தொகையும் 2014 திசெம்பர் 31 திகதியளவில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் மதியுரை கட்டணமும் உட்பட அந்த நிர்மாண வேலைகளுக்காக ரூபா 7,657,349 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் 2014 திசெம்பர் 31 திகதியின் பின்னர் அமைச்சின் ஏற்பாடுகள் கிடைக்கப் பெறாமையினால் நிர்மாண வேலைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தது. 2017 அக்தோபர் 16 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது அந்த காணி காடுகள் வளர்ந்து பயன்படுத்தப்படாத நிலையில் காணப்படதென அவதானிக்கப்பட்டது.

(ஆ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு செயலாளரின் 2017 மார்ச் 28 ஆந் திகதி MNPEA/YAD/03/01 இலக்கம் கொண்ட கடிதத்தின் பிரகாரம், தேசிய இளைஞர் சேவை மன்றத்திற்கு சொந்தமான ஹெடிகம மாதங்கஹவத்த என்ற காணி பல்வேறு தேவைகளுக்காக தலைநகருக்கு வரும் இளைஞர் யுவதிகளுக்கு குறுகிய கால தங்குமிட வசதிகளை வழங்குவதற்காக விளையாட்டு திடல் ஒன்றும் விடுதி ஒன்றும் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இளைஞர் சேவை மன்றத்தினால் 2017 செப்டம்பர் 18 திகதி அளவில் நிதித் திட்டமிடலுக்காக ரூபா 2,400,601 தொகை செலுத்தியிருந்த போதிலும் 2018 ஜுன் 30 திகதி வரையும் அதன் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கபட்டிருக்கவில்லை. மேலும், அந்த மதியுரை நிறுவனத்துடன் ஏற்பட்டிருந்த சட்ட சிக்கல் காரணத்தினால் மேற்கொண்டிருந்த உடன்படிக்கையை

முடிவுறுத்தி மீதியான வேலைகளுக்காக வேறு மதியுரை நிறவனம் ஒன்று தெரிவு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருப்பதாக கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**6.1.3 தாமதமாகிய செயற்திட்டங்கள்**

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் 2016 ஆண்டின் போது நிர்மாண வேலை ஆரம்பிக்கபட்டிருந்த 2017 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு தீர்மானித்திருந்த உடன்பட்டிருந்த பெறுமதி ரூபா 141,910,758 தொகைக்கான 2 செயற்திட்டங்களுக்காக இரண்டு சந்தர்பங்களில் கால நீடிப்பு வழங்கியிருந்த போதிலும் 2018 ஜுன் 30 திகதி அளவிலும் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்திருக்காததுடன், 2018 ஜுன் 20 திகதியில் உள்ளவாறு பௌதீக முன்னேற்றம் 62 சதவீதமாக காணப்பட்டதுடன் அத் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 87,153,099 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**6.2 பாதீட்டு கட்டுபாடு**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மன்றத்தின் 9 பிரிவுகளுக்காக பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் உள்ளவாறான செலவுகளிடையே 25 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவானிக்கபட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான முகாமைத்துவ கட்டுபாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(ஆ) நிதிக் கூற்றுகளுடன் சமர்பிக்கபட்டிருந்த பாதீட்டு முரண்கள் மற்றும் செலவு பொழிப்பு அட்டவணைகளின் பரிசோதனையின் போது ஒரு செலவு விடயத்தின் செலவு ரூபா 315,055 இனால் மிகையாகவும் 4 செலவு விடயங்களில் செலவுகளின் கூட்டுத்தொகை ரூபா 32,683,429 இனால் குறைவாகவும் பாதீட்டு முரண்களின் கீழ் காட்டப்பட்டது.

**6.3 வருடாந்த அறிக்கை சபையில் சமர்பித்தல்**

2006 ஜுன் 02 திகதி பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 இன் பிரகாரம் வருடாந்த அறிக்கை கணக்கு ஆண்டு முடிவடைந்த 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டுமெனினும் 2016 ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை 2018 ஜுலை 31 அளவிலும் பாராளுமன்றத்தில் சமர்பித்திருக்கவில்லை.

**6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்**

2015 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிக் காட்டிய நிறுவனத்தின் நிதி மற்றும் நிருவாக அலுவல்கள் தொடர்பாக பொருண்மையான தாக்கம் ஒன்று ஏற்பட்டுள்ள 02 கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக மற்றும் கடந் ஆண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூலம் சுட்டிகாட்டிய 05 பொருண்மையான பிடிப்புகள் தொடர்பாக மீளாய்வாண்டு இறுதியிலும் உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் 04 கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் தொடர்பாக எடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பாக கணக்காய்விற்கு விளக்கமான பதில் ஒன்று வழங்குவதற்கு முடியாதிருந்தது.

**7 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டது பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| **முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு** | **அவதானிப்புக்கள்** |
|---|---|
| (அ) பெறுகை | அரச பெறுகைகள் வழிகாட்டல் கோவைக்கு இணக்கமில்லாத முறையான பெறுகை செயல் முறை ஒன்று நிறுவப்பட்டிருக்காமை மற்றும் அதன் ஊடாக அரசாங்கப் பணம் வினைத்திறனுடன் ஆக்கபூர்வமாக மற்றும் சிக்கனமாக பயன்படுத்தியிருக்காமை |
| (ஆ) கணக்கீடு | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம கடைபிடித்து நிதித் தகவல்கள் பிழையின்றி அறிவிக்கும் வித்தால் முறையான கணக்கீட்டு முறைமை ஒன்று நடத்தப்படாமை. |
| (இ) பதவியணி நிருவாகம் | அங்கீகரிக்கரிக்கப்பட்ட பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கு இணங்க ஆள் சேர்த்தல். பதவி உயர்வு, பயற்சி மற்றும் அபிவிருத்தி செய்தல் மற்றும் நிறுவனத்தின் குறிக்கோள்கள் மற்றும் நோக்கங்கள் நிறைவேற்றி கொள்வதற்கு இயலுமான முறையில் மனிதவள திட்டமொன்று தயாரித்து மீளாய்வு செய்து நாளதுவரை ஆக்கப்பட்டிருக்காமை. |
| (ஈ) பயிற்சி பாடநெறிகள் நடாத்துதல் | நிறுவனத்தினால் செயற்படுத்தப்படும் பயிற்சி நிகழ்ச்சி திட்டங்களுக்காக ஆலோசகர் சேர்த்துக் கொள்ளல் மற்றும் கொடுப்பனவு செய்வதை போலவே தற்போதைய இளைஞர்களின் தேவைகளை பூர்த்தி செய்யக் கூடிய விதமாக பயிற்சி நிகழ்ச்சி திட்டங்கள் திட்டமிட்டு செயற்படுத்தாமை. |
| (உ) சொத்துக்கள் கட்டுப்பாடு | மன்றத்திற்கு சொந்தமான சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் நிடித்திருத்தல் என்பவற்றை உறுதிபடுத்தும் விதமாக முறையான ஆவணங்கள் பேணப்படல் மற்றும் வருடாந்த பண்டக் கணிப்பீட்டின் மூலம் வெளிப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் தேவையான நடவடிக்கைகள் எடுக்காமை. |